உ

ஸ்ரீ இராமஜெயம்

இராமன் புகழ் மாலை



தொகுப்பு:

ராய. சொ.

(✪)

அரு. சி. சின்னய்யா செட்டியார்

கொத்தமங்கலம்

அறுபதாம் ஆண்டு நிறைவு விழா வெளியீடு

விசுவாவசு ஆவணி 24 (9—9—65)

30/7

உ

ஸ்ரீ இராமஜெயம்

இராமன் புகழ் மாலை



தொகுப்பு:

ராய. சொ.

அரு. சி. சின்னய்யா செட்டியார்
கொத்தமங்கலம்
அறுபதாம் ஆண்டு நிறைவு விழா வெளியீடு
விசுவாவசு ஆவணி 24 (9—9—65)

30/4

உ

சிவமயம்

நூல் முகம்

கொத்தமங்கலம் அன்பர் அரு. சி. சின்னய்யா செட்டியார் அவர்கள் தம் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா மலராக இதனை வெளியிட்டுப் புகழ் பெறுகின்றார்.

அன்பர் சின்னய்யா செட்டியார் இராமபிரானிடம் மிக்க பற்றுடையவராதலால் இராமனைப் பற்றிய இரு பகுதிகளை இந்நூலுள் இணைத்திருக்கின்றார். ஒன்று குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்து அருளிய இராமன் பெருமை அடங்கிய பதினொரு பாசுரங்களின் தொகுப்பு. மற்றொன்று

“அறுபத்து நாலு அடி இராமாயணம்” என்று கன்ன பரம்பரையாக வழங்கப் பெறும் நூற்றுப் பன்னிரண்டு சீர் கொண்ட ஒரு விருத்தம்.

இந்நூலை வெளியிடும் அறுபது ஆண்டுகள் நிறைவு எய்திய அன்பர் சின்னையா செட்டியார் அவர்களுக்குப் பல்லாண்டு கூறுகின்றேன்.

ராய. சொ.

உ

ஸ்ரீ இராமஜெயம்

குல சேகர ஆழ்வார் அருளிய

இராம காதை

அங்கண்நெடு மதிள்புடைசூழ்
அயோத்தி என்னும்
அணிநகரத்து உலகுஅனைத்தும்
விளக்கும் சோதி

வெங்கதிரோன் குலத்துக்குஓர்
விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட
வீரன் தன்னை,

செங்கண்நெடுங் கருமுகிலை
இராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்,

எங்கள்தனி முதல்வனை,எம்
பெருமான் தன்னை
என்றுகொலோ கண்குளிரக்
காணும் நாளே!

வந்துஎதிர்ந்த தாடகைதன்
உரத்தைக் கீறி
வருகுருதி பொழிதர,வன்
கணைஒன்று ஏவி,

மந்திரங்கொள் மறைமுனிவன்
வேள்வி காத்து
வல்லரக்கர் உயிர்உண்ட
மைந்தன் காண்மின்,

செந்தளிர்வாய் மலர்நகைசேர்
செழுந்தண் சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்,

அந்தணர்கள் ஒருமூவா
யிரவர் ஏத்த
அணிமணிஆ சனத்துஇருந்த
அம்மான் தானே.

செவ்வரிநற் கருநெடுங்கண்
சீதைக்கு ஆகிச்
சினவிடையோன் சிலையிறுத்து,
மழுவாள் ஏந்தி

வெவ்வரிநற் சிலைவாங்கி
வென்றி கொண்டு,
வேல்வேந்தர் பகைதடிந்த
வீரன் தன்னை,

தெவ்வர்அஞ்ச நெடும்புரிசை
உயர்ந்த பாங்கர்த்
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்,

எவ்வரிவெஞ் சிலைத்தடக்கை
இராமன் தன்னை
இறைஞ்சுவார் இணைஅடியே
இறைஞ்சி னேனே.

தொத்துஅலர்பூஞ் சுரிகுழல்கை
கேசி சொல்லால்
தொன்னகரம் துறந்து,துறைக்
கங்கை தன்னை,

பத்தியுடைக் குகன்கடத்த,
வனம்போய்ப் புக்குப்
பரதனுக்குப் பாதுகமும்
அரசும் ஈந்து,

சித்திரகூ டத்துஇருந்தான்
தன்னை இன்று
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்,

எத்தனையும் கண்குளிரக்
காணப் பெற்ற
இருநிலத்தார்க்கு இமையவர்நேர்
ஒவ்வார் தாமே.

வலிவணக்கு வரைநெடுந்தோள்
விராதைக் கொன்று,
வண்தமிழ்மா முனிகொடுத்த
வரிவில் வாங்கி,

கலைவணக்கு நோக்குஅரக்கி
மூக்கை நீக்கி,
கரனோடு தூடணன்தன்
உயிரை வாங்கி,

சிலைவணக்கி மான்மறிய
எய்தான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்,

தலைவணக்கிக் கைகூப்பி
ஏத்த வல்லார்
திரிதலால் தவமுடைத்துஇத்
தரணி தானே.

தனமருவு வைதேகி
பிரியல் உற்றுத்
தளர்வுஎய்திச் சடாயுவைவை
குந்தத்து ஏற்றி,

வனமருவு கவிஅரசன்
காதல் கொண்டு
வாலியைக்கொன்று இலங்கைநகர்
அரக்கர் கோமான்,

சினம்அடங்க மாருதியால்
சுடுவித் தானைத்
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்,

இனிதுஅமர்ந்த அம்மானை
இராமன் தன்னை
ஏத்துவார் இணைஅடியே
ஏத்தி னேனே.

குரைகடலை அடல்அம்பால்
மறுக எய்து,
குலைகட்டி மறுகரையை
அதனால் ஏறி,

எரிநெடுவேல் அரக்கரொடும்
இலங்கை வேந்தன்
இன்னுயிர்கொண்டு அவன் தம்பிக்கு
அரசும் ஈந்து,

திருமகளோடு இனிதுஅமர்ந்த
செல்வன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்திர
கூடந் தன்னுள்,

அரசுஅமர்ந்தான் அடிசூடும்
அரசை அல்லால்
அரசாக எண்ணேன்மற்று
அரசு தானே.

அம்பொன்நெடு மணிமாட
அயோத்தி எய்தி,
அரசுஎய்தி, அகத்தியன்வாய்த்
தான்முன் கொன்றன்

தன்பெருந்தொல் கதைகேட்டு,
மிதிலைச் செல்வி
உலகுஉய்யத் திருவயிறு
வாய்த்த மக்கள்

செம்பவளத் திரள்வாய்த்தன்
சரிதை கேட்டான்
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்,

எம்பெருமான் தன்சரிதை
செவியால் கண்ணல்
பருகுவோம் இன்னமுதை
மதியோம் இன்றே.

செறிதவச்சம் புகன்தன்னைச்
சென்று கொன்று,
செழுமறையோன் உயிர்மீட்டுத்
தவத்தோன் ஈந்த

நிறைமணிப்பூண் அணிகொண்டு
இலவணன் தன்னைத்
தம்பியால் வான்ஏற்றி
முனிவன் வேண்ட,

திறல்விளங்கும் இலக்குமனைப்
பிரிந்தான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்

உறைவானை, மறவாத
உள்ளந் தன்னை
உடையோம்மற்று உறுதுயரம்
அடையோம் இன்றே.

அன்றுசரா சரங்களவை
குந்தத்து ஏற்றி,
அடல்அரவப் பகைஏறி
அசுரர் தம்மை

வென்று,இலங்கு மணிநெடுந்தோள்
நான்கும் தோன்ற
விண்முழுதும் எதிர்வரத்தன்
தாமம் மேவி,

சென்றுஇனிது வீற்றுஇருந்த
அம்மான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்,

என்றும்நின்ருன் அவன்இவன்என்று
ஏத்தி நாளும்
இறைஞ்சுமினோ எப்பொழுதும்
தொண்டீர்! நீரே.

தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்
திறல்விளங்கு மாருதியோடு
அமர்ந்தான் தன்னை,

எல்லையில்சீர்த் தயரதன்தன்
மகனாய்த் தோன்றிற்று
அதுமுதலாத் தன்னுலகம்
புக்கது ஈறு,

கொல்லியலும் படைத்தானைக்
கொற்ற ஒள்வாள்
கோழியர்கோன் குடைக்குலசே
கரன்சொற் செய்த

நல்லியலின் தமிழ்மாலை
பத்தும் வல்லார்
நலந்திகழ்நா ரணனடிக்கீழ்
நண்ணு வாரே.

உ

ஸ்ரீ இராமஜெயம்

ஒரே பாட்டில் இராமாயணம்

நூற்றுப் பன்னிரண்டு சீர்கொண்ட விருத்தம்.

சீர்கொண்ட செந்தமிழ்
மதுரமொழி அமரர்பதி
செல்விஇந் திராணி மன்னன்,

தேவரொடு வாசவன்,
எமதர்ம ராசனும்
திக்குப்பா லகர னந்தர்

சென்றுசீர்ச் சிவன்மலர்த்
திருவடிகள் போற்றியே,
தீய,ரா வணன்இ டுக்கண்

செப்ப,வட மேருகிரி
தன்னிலே ஒருபால்
சென்றுரக சியம்மு டித்து,

திருக்கொலு கலைந்தபின்
அவரவர் இருப்பிடம்
சென்றபின் நார தர்க்கு,

திருஉடல் வியர்த்துஅவர்
வயிறது வெடிக்குமுன்
செப்பினுர் புற்றி னுள்ளே;

செய்தவ வான்மீகி
உள்ளிருந் தோர்காதில்
சென்றுஅந்த உரைகள் வீழ,

சிவசிவா என்றுமே
கீர்வாண சுலோகமாய்ச்
செப்பினுர் இராம காதை;

சென்றுமுதல் மூவரில்
வைகுந்த வாசனும்
திருவளர் அயோத்தி நகரில்

தெசரதன் தேவிநல்
கோசலை வயிற்றினில்
சீராமர் ஆக வந்தார்.

சேயிழை சுமித்திரை
கைகேயி இருவர்பால்
சேடனோடு ஆழி சங்கு

சென்றுஇலக் குவன்பரதன்
சத்துருக் கனனெனச்
சேயவர்கள் நால்வர் ஆகச்

சேர்ந்துவிளை யாடையில்
கூனிஉடல் நிமிரவே
சிற்றுவில் உண்டை எய்து,

சீலரா கவனுடன்
தம்பியும் சென்றுவிசு
வாமித்ரன் செய்த வேள்வியைச்

சீரழித் திட்டதோர்
தாடகை தனைக்கொன்று
சிறுமகன் தன்னை ஓட்டி,

செல்வினும் அகலிகை
கல்லுருத் தீர்ந்திடத்
திருவடிச் செல்வம் நல்கி,

கார்கொண்ட மிதிலையில்
சனகன்இடு சிலையினைக்
கையால் எடுத்துஒ டித்துக்

கலியாணம் செய்திடத்
தாய்தந்தை முதலான
கணமெலாம் வரவ ழைத்துக்

கன்னியாம் சானகி
தன்னை மணம்செய்து
கடுகிவரும் வேளை தன்னில்,

கறுத்தமுனி யாம்பரசு
இராமன் எதிர்த்திடக்
கனத்த கோதண்டம் வாங்கி,

கௌசலை தயாதன்
முதலான பெரியோர்கள்
களித்திட அயோத்தி வந்து,

கனகமணி முடிசூட
முன்னின்ற காலையில்,
காய்ந்த பகையால் கூனியும்

கைகேயி இடம்வந்து
சூழ்வினை உரைக்கஅவள்
கணவனிடம் வரங்கள் வாங்க,

காட்டினில் ஏழிரண்டு
ஆண்டுகள் கழித்திடக்
காகுத்தன் மனைவி யோடும்

கணமும் பிரிந்திடாத்
தப்பிலக் குவனெடும்
கங்கையின் கரையை நண்ணி,

காட்டுமன் குகனெனும்
வேடனைத் துணைகொண்டு
கங்கை நதியைக் கடந்து,

களிப்புடன் பஞ்சவடி
தீர்த்தத் திருக்கையில்
கனசேனை யொடுப ரதனும்

கால்நடை யதாய்வந்து
சேவித்து நிற்கவே
கமலபா துகம ளித்து,

காட்டிலே பதினுன்கு
ஆண்டுகள் கழிந்தபின்
கனகமதில் நகர்அ ணுகுவோம்,

கடிதினில் ஏகுஎனப்
பரதனை அனுப்பவே,
காலம் சிலக ழிந்தபின்,

கன்னிஎன இராவணன்
தங்கையாம் சூர்ப்பணகை
கபடங்கள்பல செய்திட,

காதொடு தனத்தையும்
மூக்கையும் அறுக்கவே
கரதூட ணுதி கேட்டு,

வேர்கொண்டு எழுந்ததம
சேனைமுழு தும்சென்று
விண்ணுல கடைந்த பின்னர்

விசைகொண்ட தசமுகன்
அறிந்துமா ரீசனை
வேடமா னுக்கி விடவே

விளையாடி அந்தமான்
நின்றதைக் கண்டுமே
மெல்லியல் சீதை வேண்ட,

வீரரா கவமுனிவர்
கோதண்டம் வாங்கியே
வெகுதொலை துரத்தி எய்ய,

விழும்போது இலக்குவா
  என்றவன் கூவவே
    வீரலக் குவனும் ஏக,

வீற்றிருந்த பன்னக
  சாலையொடு சீதையை
    வேரோடு எடுத்துஅ ரக்கன்

விமானமதி லேவைத்து
  இலங்கைநகர் செல்கையில்
    விடேன்என்ற சடாயு தன்னை,

வெட்டித் துணித்தேகி
  அசோகவன மீதினில்
    தேவியைச் சிறை வைத்திட,

வெந்துயர்கொள் இராகவன்
இளையபெரு மாளொடும்
வெங்கா னெலாம் திரிந்து,

விரைவுடன் தேடிஉயிர்
விட்டசடா யுவெனும்
வீரன் கடன்மு டித்து,

விராதனை வதைத்து,
சவுரியைப் புட்பக
விமானத்தில் ஏற்றி விட்டு,

வீரஅனு மானுடன்
சுக்கிரீ வனைக்கண்டு,
வெய்யவா லியைம டித்து,

வித்தக மாருதி
  தனைத்தூது அனுப்பியே
    வெற்றிஅடை யாளம் வாங்கி,

வெள்ளம்எழு பதுகொண்டு
  கடலில்அணை கட்டியே
    மேருமுடி இலங்கை மேவி,

வீடணன் சரணடைய,
  அபயம்அவ னுக்குஈந்து
    தம்பிஎன அவனை ஏற்று,

வெளியாக இராவணன்
  வாராமை யால்தேவி
    மெல்லியலின் விடுதல் நாடி,

பார்கொண்ட. அங்கதன்
தனைத்தூது அனுப்பியே
பத்துமுடி யோனி டத்தில்

பச்சைஇள மயிலதனை
விட்டுவிடு இல்லைஎனில்
படைபொருத வருக என்ன,

பரமன்உறை மாமலையை
எடுத்ததோள் ஆண்மையான்
பத்துவா யால்ந கைத்து,

பராக்கிரம மொடுவந்து
மோதிப்பல் சேனையொடு
படைவீர ரான சூரர்

பாலரொடு கும்பகன்
ஞதியர் இறக்கவே,
பார்த்தன்நிகர் மேக நாதன்

படையுடன் எதிர்க்கவே
இளையபெரு மாளுடைய
பாணத்தி ஞல்ம டித்துப்

பாரெலாம் அஞ்சுறும்
மூலபல சேனையைப்
பசைஅற அழித்துஒ ழித்துப்

பத்துமுடி யோனைத்
துணித்துவீ டணற்குப்
பட்டமும் கட்டி வைத்து,

பருவ,ரதி மாதின்உயர்
மாமியாம் சீதையாள்
பட்டசிறை மீட்டி, இந்திர

பதிவிட்ட புட்பக
விமானத்தி லேறியே
படைவீரர் சூழ்ந்து போதப்

பரதனுக்கு அனும்னே
முன் தூது போக்கியே
பரதன்உயிர் பாது காத்து,

பரத்துவா சன்விருந்து
உண்டபின் அயோத்திநகர்
பாங்காக வந்து சேர்ந்து,

பட்டாபி ஷேகமும்
  பண்ணிஒரு குடையினுல்
    பார்முழுதும் ஆண்ட, சக்கர

பதிஆன ரகுராம
  சந்திரன் மருகனே!
    பரம சிவனுர் பாலனே!

பச்சைமயில் ஏறியே
  பத்தர்கள் தமைக்காக்கப்
    பாரினில் தேவ சபையாம்

பழநிமலை மேல்வந்து
  விளையாடி நிற்கின்ற
    பரமகுரு வான குகனே!